# ‘முரட்டுப் பக்தருக்கு’ எதிராக நால்வர் அணி!

**கரிகாலன்**

தூத்துக்குடி மாவட்ட தி.மு.க. என்றாலே அது மாவட்ட செயலர் பெரியசாமி தான் என்ற நிலையை மாற்றி இருக்கிறார் அனிதா ராதாகிருஷ்ணன். இவருக்காக பெரியசாமியின் வலது கரமான மாவட்ட துணைச் செயலர் அருணாவை கட்சியை விட்டே நீக்கியது பெரியசாமியின் செல்வாக்குக் குறைந்து வருவதை படம் பிடித்துக் காட்டுகிறது.

தூத்துக்குடி மாவட்ட அ.தி.மு.க. வி.ஐ.பி. ஹென்றியைத் தாக்குகிற மாதிரி அனிதாவை வம்புக்கு இழுத்தார் தூத்துக்குடி மாவட்டச் செயலர் பெரியசாமியின் வலதுகரமான மாவட்டச் துணை செயலர் ஏ.சி. அருணா. ‘ஹென்றி துவங்கிய நகைக்கடைக்கு பொருள் உதவி செய்தவர் தற்போது தி.மு.க.வில் இருக்கும் அனிதா தான்’ என்றவர் ஒரு கட்டத்தில் ‘அனிதா அ.தி.மு.க.வில் இருந்தபோது அனிதாவின் உள்ளாடைகளைத் துவைத்தவர்களே ஹென்றி குடும்பத்தினர்தான்’ என்று பேசிவிட ஹென்றி மட்டுமல்ல. அனிதாவும் ஆத்திரமாகி விட்டார். ஏ.சி. அருணா இப்படிப் பேசக் காரணம் மாவட்ட, செயலர் பெரியசாமிதான் என்று அனிதா ஆதரவாளர்கள் உசுப்பேற்ற மறுநாள் உடன்குடியில் நடக்க இருந்த தி.மு.க. கூட்டத்தில் ஏ.சி. அருணாவைத் தாக்க திட்டம் தீட்டப்பட்டது. இதை தி.மு.க. தலைமையிடம் தி.மு.க. விசுவாசிகள் போட்டுக் கொடுக்க பெரியசாமிக்கும், அனிதா ராதாகிருஷ்ணனுக்கும் தலைமையில் இருந்து உத்தரவுகள் பறந்தன. உடன்குடி கூட்டத்துக்கு தனது காரில் ஏற்றிக் கொண்டு வந்த துரையை வழியிலேயே இறக்கி விட்டுவிட்டு உடன்குடி வந்தார் பெரியசாமி. அதற்குள்ளாக உடன்குடியில் இருந்த அனிதாவைக் கூட்ட அரங்கில் இருந்து வெளியேறும்படி தகவல் வர, உடனடியாக தனது ஆதரவாளர்களுடன் வெளியேறி இருக்கிறார் அனிதா. விரக்தியடைந்த அனிதா ஃபோனில் ‘உங்களை நம்பி வந்த எனக்கு இதுதான் நீங்கள் தரும் மரியாதையா?’ என்று அழகிரியிடம் கதற, அதன் விளைவுதான் ஏ.சி. அருணா கட்சியை விட்டே நீக்கப்பட்ட விவகாரம்.

தூத்துக்குடி மாவட்ட தி.மு.க. துணைச் செயலர் ஏ.சி. அருணா எப்போதும் பெரியசாமியுடனேயே இருப்பவர். பெரியசாமியிடம் அதிக செல்வாக்கு பெற்றவர். அவரையே பெரியசாமியிடம் ஆலோசனை செய்யாமல் கட்சிப் பதவியைப் பறித்தது மட்டுமல்ல, கட்சியில் இருந்தே நீக்கி இருப்பது பெரியசாமி ஆதரவாளர்களிடையே பரபரப்பை ஏற்படுத்துவிட்டது. பெரியசாமியின் அரசியல் வாழ்க்கையில் அவருக்கு ஏற்பட்ட முதல் சறுக்கலாகவும் அமைந்துவிட்டது. அதோடு பெரியசாமியின் சர்வாதிகாரப் போக்கு பிடிக்காத தூத்துக்குடி தி.மு.க. எம்.பி. ஜெயத்துரை, முன்னாள் திருவைகுண்டம் எம்.எல்.ஏ. டேவிட் செல்வின், ம.தி.மு.க.வில் இருந்து தி.மு.க.வுக்கு வந்திருக்கும் கே. எஸ். ராதாகிருஷ்ணன் மூவரையும் ஒன்றிணைத்து ஒரு நால்வர் அணியையும் அமைத்துப் போராட தயாராகி வருகிறார் அனிதா.

அனிதா ராதாகிருஷ்ணன்





பெரியசாமி

போஸ்டர்




தூத்துக்குடி மாவட்ட தி.மு.க.வில் அசைக்க முடியாத சக்தியாக இருக்கும் பெரியசாமியை எதிர்த்து முதல் முதலில் போர்க்கொடி தூக்கியவர் என்றால் அது டேவிட் செல்வின் தான்! விளைவு திருவைகுண்டம் எம்.எல்.ஏ., திருவைகுண்டம் ஒன்றியச் செயலர் என்று பதவி வகித்த டேவிட் செல்வினை அரசியலில் இருந்தே அப்புறப்படுத்தி விட்டார். இன்று தி.மு.க.வில் எந்தப் பதவியும் இல்லாத நிலையிலும் பெரியசாமியைப் பழிவாங்க துடித்துக் கொண்டிருக்கும் அதே டேவிட் செல்வினைத் தான் தனது அணியில் இணைத்துக் கொண்டிருக்கிறார் அனிதா ராதாகிருஷ்ணன்.

அடுத்து வருபவர் ஜெயத்துரை எம்.பி. துவக்கத்தில் பெரியசாமி என்ன சொன்னாலும் செய்து வந்த ஜெயத்துரை, பெரியசாமி ஆசியுடன் எம்.பி. ஆன பிறகு அவரது சர்வாதிகாரத்தை எதிர்க்க ஆரம்பித்தார். இதன் விளைவாக இவரது எம்.பி. அலுவலகமே தாக்கப்பட்டதுடன் தீ வைப்பதும் நடந்தது. பல்வேறு தருணங்களில் எம்.பி. ஆதரவாளர்களும் தாக்கப்பட்டனர். ஆனாலும் தனது பெரியசாமி எதிர்ப்பைக் கைவிடாத ஜெயத்துரை எம்.பி.யையும் தனது அணியில் இணைத்துக் கொண்டிருக்கிறார் அனிதா ராதாகிருஷ்ணன்.

தி.மு.க.வின் லேட்டஸ்ட் என்ட்ரியான கே.எஸ். ராதாகிருஷ்ணன் கோவில்பட்டி பகுதியைச் சேர்ந்தவர். இவர் ம.தி.மு.க.வில் இருந்து தி.மு.க.வுக்கு வந்ததையே விரும்பாத பெரியசாமி, கே. எஸ். ராதாகிருஷ்ணன் தன்னைக் கேட்காமல் அவரது பகுதியில் எந்த நிகழ்ச்சிகளும் நடத்தக்கூடாது என்று தடை விதித்திருந்தார். இதனால் வரும் தேர்தலில் கோயில்பட்டியைக் குறி வைத்த கே. எஸ். ராதாகிருஷ்ணன் அப்செட் ஆனார். அவரையும் தனது அணியில் இணைத்துக் கொண்ட அனிதா, “இனி பெரியசாமிதான் தூத்துக்குடி தி.மு.க. என்ற இமேஜை உடைப்பதுதான் எனது முதல் வேலை” என்று சபதமே ஏற்றிருக்கிறாராம்.

இந்நிலையில் கடந்த 21ஆம் தேதி முன்னாள் திருவைகுண்டம் ஒன்றிய தி.மு.க. செயலரும், பெரியசாமியின் அதிருப்தியாளருமான ரவி என்பவரின் இல்ல திருமண விழா சிவத்தையாபுரத்தில் நடந்தது. இதற்காக தனது ஆதரவாளர்கள் இருவரை விட்டு போஸ்டர் அடித்த ரவி, போஸ்டரில் பெரியசாமிக்கு எதிரான நால்வர் அணியைச் சேர்ந்த அனிதா, ஜெயத்துரை, கே.எஸ். ராதாகிருஷ்ணன், டேவிட் செல்வின் போன்றோரின் படத்தைப் போட்டு பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறார்.

⁕